# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 10.04.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் திருக்குர்ஆனின் அதிகாரம் ஆலி இம்ரானின் 191, 192 ஆகிய வசனங்களை ஓதினார்கள்.**

பொருள்: வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும், இரவும் பகலும் மாறிமாறி வருவதிலும் அறிவுடையோருக்கு நிச்சயமாகப் பல அடையாளங்கள் உள்ளன.

அவர்கள் நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும், ஒருக்கணித்துப் படுத்துக் கொண்டும் அல்லாஹ்வே (எப்போதும்) நினைத்துக் கொண்டிருப்பர். வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பு பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பர். எங்கள் இறைவா! நீ இதனை வீணாகப் படைக்கவில்லை. நீ தூய்மையானவன். எனவே நீ எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக (எனக் கூறுவர்). (3:191, 192)

இந்த வசனங்களில் அல்லாஹ், எல்லாவிதமான படைப்பும் அல்லாஹ்வின் படைப்பாகும் என்று கூறுகின்றான். இந்த படைப்பில் வானம், பூமி ஆகியவற்றில் உள்ள எல்லாம் அடங்கும். மனிதனும் இந்த படைப்பில் ஒருவன் ஆவான். மனிதனுடைய பயனுக்காக, மனிதனின் முன்னேற்றத்திற்காக இரவும் பகலும் படைக்கப்பட்டுள்ளன.

பகலே இல்லாமல் இரவு மட்டும் இருந்தால் உங்கள் நிலை என்னவென்று சற்று சிந்தித்துப் பாருங்கள். இரவு இல்லாமல் பகல் மட்டுமே இருந்தால் உங்கள் நிலை என்ன? மேற்கத்திய நாடுகளில் குளிர் காலங்களில் பகல் மிகவும் சிறியதாகி விடுகிறது. இரவு நீண்டதாகி விடுகிறது. இந்நாட்களில் பொதுவாக Depression நோய் என்று கூறுவார்கள். அல்லாஹ் பகலையும் படைத்துள்ளான். இரவையும் படைத்துள்ளான். இது இறைவனின் மாபெரும் அருளாகும். மனிதன் எந்த வகையான சீதோஷன நிலையிலும் வாழப் பழகிக் கொண்டபோதிலும் பகல் மிகவும் சுருங்கி இரவு நீண்டுவிட்டால் Depression தொடங்கி விடுகிறது. இரவும் பகலும் பல்வேறு கால நிலையில் கூடவோ குறையவோ மாறிமாறி வருகின்றன. சில நேரங்களில் இரவும் பகலும் சமநிலைக்கு வந்து விடுகிறது. இவ்வாறு பல காலநிலைகளையும் இறைவன் மனிதனுக்காக படைத்திருக்கின்றான். இதை வைத்து மனிதன் அல்லாஹ்வின் புகழை எடுத்துரைக்க வேண்டும். ஒரே பொருள் மனிதனுடைய நலனுக்காக மாறி மாறி வந்து ஒரு சில மாற்றங்களுடன் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது மனிதன் மீது இறைவன் செய்துள்ள மாபெரும் அருட்கொடையாகும். பொதுவாக இந்த சீதோஷன நிலையில் நீண்ட பகல் கொண்ட நாட்கள் அதிகமாகவும் குறைவான பகல் நேரம் கொண்ட நாட்கள் குறைவாகவும் உள்ளன. இவ்வாறு வெளிச்சம் உள்ள நாட்களை இறைவன் அதிகமாகமாக்கி நம்மீது மாபெரும் அருள் செய்துள்ளான்.

இவ்வாறு மாறி மாறி வருகின்ற நாட்களையும், காலநிலைகளையும் பார்த்து இறைவனுக்கு நன்றி கூறுபவர்களை அறிவுள்ளவர்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். இறைவன் மனிதனைப் படைத்து அவனுக்கு ஏற்றாற்போல் காலநிலைகளையும் அமைத்துள்ளான்.

மனிதன் பகல் நாட்கள் அதிகமாக இருப்பதைப் பார்த்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறே ஆன்மீக பலன்களையும் அடைய வேண்டும். இறைவன் தனது விருப்பத்திற்குரிய அடியார்களின் மூலம் இவ்வுலகிற்கு அனுப்புகின்ற ஒளியிலிருந்து மனிதன் பலன்பெற வேண்டும். அவ்வாறு ஒளியூட்டக்கூடிய நபரை தேட வேண்டும். அவர்கள் கொண்டு வருகின்ற தூதுச் செய்தியை சத்தியத்தைக் கொண்டு இறைவன் முன் குனிந்தவாறு அதை ஏற்றுக் கொள்வதன் பக்கம் கவனம் ஏற்பட வேண்டுமே தவிர அதை நிராகரிக்கக் கூடாது.

இவைதான் மனிதனுக்கு இறைவன்பால் கவனமூட்டுகின்றன. அவனை வணங்குவதன் பக்கம் கவனமூட்டுகின்றன. இதன் மூலம் மனிதனை இறைவனுக்கு நன்றியுடையவனாக ஆக்குகின்றன.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இரண்டாவது வருகையை அடையாளம் கண்டு கொண்ட பிறகு இக்காலத்தில் அல்லாஹ் ஆன்மீக முன்னேற்றத்திற்காக அனுப்பிய ஒளியிலிருந்து நாம் பலனடைந்து வருகிறோம். இந்த வகையில் நாம் மிகவும் பாக்கியசாலிகள் ஆவோம்.

அடையாளம் கண்டு கொண்டு, ஏற்றுக் கொள்வது மட்டும் பலன் பெறுவதற்கு போதுமானது அல்ல. மாறாக, இறைவனை நினைவு கூறுவதும் மிகவும் அவசியமாகும். இது தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்.

**அல்லதீன யத்குருனல்லாஹ கியாமவ் வகுஊதுல் வஅலா ஜுனூபிஹிம்** – அவர்கள் அல்லாஹ்வை நின்று கொண்டும், அமர்ந்து கொண்டும், ஒருக்கணித்துப் படுத்துக் கொண்டும் நினைவு கூறுவார்கள்.

**வயதஃபக்கருன ஃபீ கல்கிஸ்ஸமாவாத்தி வல் அர்ழ்** – வானங்கள் மற்றும் பூமியின் படைப்பின் மீது சிந்திப்பார்கள். எவ்வாறு அல்லாஹ் வானங்களையும், பூமியையும் படைத்தான் என்று சிந்திப்பார்கள்.

**ரப்பனா மா கலக்த ஹாதா பாத்திலா. ஸுப்ஹானக்க ஃபக்கினா அதாபன்னார்**. இதைப்பற்றி சிந்தித்த அவர்கள் தங்களையும் அறியாமல், எங்கள் இறைவா! நீ இவை அனைத்தையும் குறிக்கோள் இல்லாமல் படைக்கவில்லை. மாறாக, நீ படைத்துள்ள ஒவ்வொரு பொருளும் ஒரு குறிப்பான நோக்கத்திற்காகவே படைக்கப்பட்டுள்ளன என்று கூறுவார்கள். இறைவன் இப்பூமியில் படைத்துள்ள விஷப்பூச்சிகளையும் ஒரு நோக்கத்திற்காகவே படைத்துள்ளான். மேலும் நீ தூயவன்! எனவே எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக! நாங்கள் உனது இறைத்தன்மையை நிராகரித்து நெருப்பின் தண்டனைக்கு ஒருபோதும் ஆளாக மாட்டோம் என்று கூறுவார்கள்.

எனவே, ஏற்றுக்கொண்ட பிறகு, அடையாளம் கண்டு கொண்ட பிறகு நமது பொறுப்பு இன்னும் அதிகமாகி விடுகிறது. அல்லாஹ்வை நினைவு கூறுவதன் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும். இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளையும் நாம் பார்க்கும் போது இறைவனுக்கு நன்றிகூற வேண்டும் என்ற உணர்வு நமக்கு ஏற்பட வேண்டும். இவ்வாறு நாம் சிந்திக்கும்போது இறை வணக்கத்தின் பக்கம் நமக்கு கவனம் ஏற்படும். இறைவனை வணங்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும்போது, இறை கட்டளைகள் அனைத்தையும் பேணி நடப்பதன் பக்கம் கவனம் ஏற்படும். ஆக, இந்த வட்டத்திற்குள் மனிதன் வந்த பிறகு நன்மைகள் மற்றும் நன்றி உணர்வு ஆகிய சிந்தனையைப் பெற்று விடுகிறான். நன்மைகள் செய்வதற்கு பாக்கியம் பெறுகின்றான்.

வானங்கள் மற்றும் பூமியில் அல்லாஹ் படைத்துள்ள ஒவ்வொரு பொருளின் மீதும் சிந்தனையைச் செலுத்தி மூஃமினுக்கு ஈமான் உறுதியாகிக் கொண்டே செல்கிறது. இதன் மூலம் இறை அடியாருக்கு இறைவனை அடையாளம் கண்டு கொள்கின்ற வாய்ப்பு கிடைக்கிறது.

(உலகத்தின்) இந்தப் பகுதியில் நாம் பார்க்கின்றோம். உயர்ந்த மலைகள் இருக்கின்றன. ஆழமான பாதாளங்கள் உள்ளன. நீரூற்றுகள் உள்ளன. ஆறுகளும், ஓடைகளும், குளங்களும் உள்ளன. இவையனைத்தும் நமக்கு இறைவனைப் பற்றிய சிந்தனையை ஊட்டுகின்றன. இவைகள் அனைத்தையும் இறைவன் நமது நன்மைக்காக படைத்திருக்கின்றான். நாம் விண்வெளியின் வரைபடத்தைப் பார்த்தால், Universe –ன் படத்தைப் பார்த்தால், நட்சத்திர கூட்டங்களுக்கு மத்தியில் பூமி ஒரு மிகச்சிறிய புள்ளியைப் போன்று காணப்படுகிறது. அதைப் பார்க்கும் போது பூமி ஒன்றுமே இல்லாதது போல் தென்படுகிறது. நமது பூமி இதற்கு மத்தியில் எங்காவது ஓரிடத்தில் இருக்கிறது என்றுதான் எழுதப்படுகிறது. இந்த பூமியிலும் இறைவன் எண்ணற்ற படைப்பினங்களைப் படைத்துள்ளான்.

காடுகளில், சமவெளிகளில் எங்காவது சென்று பாருங்கள். அல்லது ஒரு நதியின் கரை ஓரமாக சென்று பாருங்கள். அல்லது பாலைவனத்தில் நின்று பாருங்கள். உங்களுக்கு இறைவனின் வல்லமை ஒரு புதிய வடிவில் தென்படும். இறைவல்லமையின் வெளிப்பாடு ஒரு புதிய கோணத்தில் உங்களுக்கு தென்படும். இவை அனைத்தும் இறைவனுடைய இறைத் தன்மையை நம்மையும் அறியாது உண்மைப்படுத்தும்.

இக்காலத்தின் இமாமை அடையாளம் கண்டு கொண்டு இதன் பக்கம் கவனம் ஏற்படுவது ஒரு அஹ்மதியின் தனிச்சிறப்பு ஆகும். இறைவனின் படைப்புகள் மீதும், அவனை வணங்குவதன் பக்கமும் குறிப்பாக கவனம் ஏற்படுகிறது.

அல்லாமா இக்பால் ஒரு மிகப் புகழ்பெற்ற உர்து கவிஞர் ஆவார். அவர் தமது பல கவிதைகளில் இறைவனைப் பற்றி புகார் கூறியுள்ளார். அவர் முஸ்லிம் ஆவார். மிகப் பெரிய ஆலிம் ஆவார். ஆனால் இறைவனின் படைப்பினங்களைப் பார்த்து இறைவனை அடையாளம் காண்கிற பாக்கியம் அவருக்கு கிடைக்கவில்லை. ஆனால் இக்காலத்தின் இமாமின் அன்பிற்குரிய புதல்வி அஹ்மதி பெண்மணி இதற்கு பதில் எழுதியுள்ளார்கள். அதாவது (தமது ஒரு உர்து கவிதையில் இவ்வாறு எழுதுகிறார்கள்) என்னை மலையின் உச்சியில் பாருங்கள். என்னை ஆழமான பாதாளத்தில் பாருங்கள். எனது ஒவ்வொரு படைப்பிலும் நான் தென்படுவேன். எனது படைப்பைப் பார்த்து நான் உங்களுக்கு நினைவுக்கு வர வேண்டும்.

ஆக, இறைவனின் ஒவ்வொரு படைப்பையும் பார்த்து முன்பை விட அதிகமாக ஈமான் உறுதி பெறுவது ஓர் அஹ்மதியின் தனிச்சிறப்பாகும். இவ்வாறு ஈமான் உறுதி அடைந்து கொண்டே செல்கிறது. இறைவனால் படைக்கப்பட்ட வானத்தை விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்கின்றனர். ஓரளவு தொலைநோக்கிக் கருவிகள் மூலம் வானத்தைப் பார்க்கின்றனர். ஆனால் அதன் ஆழத்தை ஒருபோதும் கணக்கிட முடியவில்லை. நம்மைப் படைத்து பரப்பியுள்ள இந்த பூமியிலும் மிகவும் வியக்கத்தக்க விஷயங்கள் அடங்கியுள்ளன. ஆக இதுவே இறைவனின் மகத்துவமாகும்.

இந்த வசனங்கள் 1400, 1500 வருடங்களுக்கு முன் அரபு நாட்டின் பாலைவனததில், உலக அறிவே இல்லாத ஒரு மனிதரின் மீது இறைவன் தனது கலாமை, வேத நூலை இறக்கி அவரை காமில் இன்ஸான் – முழு மனிதராக்கி விட்டான். பிறகு அவர் அதை நமக்கு எடுத்துரைத்தார்கள். இவ்வாறு இஸ்லாத்தின் உண்மைத்துவத்தின் மீதும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்தின் மீதும் ஒரு உறுதியான நம்பிக்கையை நிலைநாட்டி விட்டான். இறைவன் விஞ்ஞான முன்னேற்றங்கள் ஏதும் இல்லாத காலகட்டத்தில் வானங்கள், பூமி ஆகியவற்றைப் பற்றிய மிகவும் ஆழமான, நுட்பமான இரகசியங்களை அறிவித்து விட்டான். இவை அனைத்தையும் சிந்திக்கின்ற மனிதன் தன்னையும் மறந்து மா கலக்த ஹாதா பாத்திலா ஸுப்ஹானக்க ஃபகினா அதாபன்னார் – இறைவா நீ படைத்தவை அனைத்தும் பொய் அல்ல. எனவே இவைகளை பொய் என்று கருதி தவறிழைக்கும் மக்களாகவும், உனது வணக்கத்தை நறைவேற்றாத மக்களாகவும் ஆகி இதன் விளைவாக உனது தண்டனைக்கு நாங்கள் ஒருபோதும் ஆளாகி விட வேண்டாம் என்று கூறுகின்றான்.

எனவே இதை திருக்குர்ஆனில் நாம் படிக்கின்றோம். அறிவியல், விஞ்ஞானம். இறை படைப்பு ஆகியவைகளை நாம் படிக்கின்றபேது இறைவன் மீது ஈமான் இன்னும் உறுதியாகிறது. இதன் மூலம் இஸ்லாத்தின் உண்மைத்துவம் இன்னும் அதிகமாக நமக்கு தெளிவாகிறது. எனவே ஒவ்வொரு அஹ்மதியும் இதைப்பற்றி சிந்திக்க வேண்டும். அல்லாஹ் படைத்த ஒவ்வொரு பொருளும் அல்லாஹ்வின் இருப்புக்கு உறுதியான சான்றாகும்.

இறைவன் இல்லை என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் உலகில் காணப்படுகின்ற ஒவ்வொரு பொருளும் இறைவன் இருக்கின்றான் என்று அடையாளம் காட்டுகின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அறிவு கொண்டு சிந்திப்பவர்களை திருக்குர்ஆன் **ஊலுல் அல்பாப்** என்று கூறுகிறது. அதற்குப் பிறகு அல்லாஹ் கூறுகிறான். **அல்லதீன யத்குரூனல்லாஹ கியமாவ் வகுவூதவ் வஅலா ஜுனூபிஹிம்.** இந்த வசனத்தில், அல்லாஹ்வை நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும் நினைவு கூறுகின்றவர்கள்தான் அறிவுடையவர்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். அறிவு, ஞானம் இவையெல்லாம் வெறுமனே கிடைத்து விடும் என்று கருதிவிடாதீர்கள். அறிவும், ஞானமும், முற்போக்கு சிந்தனையும் அல்லாஹ்வின்பால் குனியாமல் ஒருபோதும் கிடைக்காது. அல்லாஹ்வின்பால் குனிபவருக்குத்தான்

மெஞ்ஞானம் கிடைக்கிறது. அவனிடம் வேண்டுபவருக்கும், அவனது படைப்பினங்களின் மீது தனது சிந்தனையை செலுத்துபவருக்கும் தான் ஞானம் கிடைக்கிறது. மூஃமினின் ஃபிராஸத் – முற்போக்கு சிந்தனைக்கு அஞ்சுங்கள் என்று இதற்காகத்தான் சொல்லப்படுகிறது. மூஃமின் இறை ஒளியில் பார்க்கின்றார். மெஞ்ஞானம், உண்மையான ஃபிராஸத் – முற்போக்கு சிந்தையும் தக்வா இல்லாமல் ஒருபோதும் கிடைக்காது. நீங்கள் வெற்றி பெற விரும்பினால், அறிவைப் பயன்படுத்துங்கள். சிந்தியுங்கள். சிந்திப்பதற்கும், ஆராய்வதற்கும் திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. கிதாபும் மக்னூன் திருக்குர்ஆன் மீது சிந்தியுங்கள். உங்களது உள்ளம் தூய்மையாகி விட்டால் பகுத்தறிவு அடிப்படையில் சிந்தித்தால் தக்வாவின் வழி நடந்தால் **ரப்பனா மா கலக்த ஹாதா பாதிலா ஸுப்ஹானக்க ஃபகினா அதாபன்னார்** என்ற வசனம் உங்களது உள்ளத்திலிருந்து வெளிப்படும். பகுத்தறிவின்படி சிந்தியுங்கள். இறைவனிடம் வேண்டுங்கள். திருக்குர்ஆனை கவனமாகப் படியுங்கள். இறைவன் முன் குனியுங்கள். அப்போது உங்களுக்கு உண்மையிலேயே ரப்பனா மா கலக்த ஹாதா பாத்திலா –வின் பொருள் புரிந்து விடும். பிறகு உள்ளத்தின் ஆழத்திலிருந்து **ஸுப்ஹானக்க ஃபகினா அதாபன்னார்** என்ற துஆ எழும். இறைவா நீ தூயவன். எங்களது தவறுகளை மன்னிப்பாயாக. எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக. எங்களை உனது விருப்பத்திற்குரிய வழியில் நடத்துவாயாக. இதன் மூலம் நாங்கள் உனது தண்டனையிலிருந்து தப்பித்திருக்க வேண்டும். நெருப்பின் தண்டனையிலிருந்து தப்பித்திருக்க வேண்டும். உங்களது உள்ளத்திலிருந்து இந்த துஆ எழும். அப்போது இறைவனின் படைப்பினங்கள் யாவும் வீணானது அல்ல என்று உங்களுக்குப் புரிந்து விடும்.

இதுவே சத்தியமாகும். மனிதன் இந்த உண்மையைப் புரிந்து கொண்டால், அனைத்தையும் படைக்கின்ற அந்த உண்மையான இறைவனுடைய இருப்பிற்கான சான்று கிடைத்து விடும். அப்போது உனது படைப்புகள் யாவும் வீணானது அல்ல என்று புரிந்து விடும். இதன் மூலம் மார்க்கத்திற்கு உதவியாக இருக்கின்ற பல்வேறு ஞானங்களும் திறன்களும் வெளிப்படும். பல்வேறு அறிவுகளும், ஞானமும் மார்க்கத்திற்கு உதவி செய்வதற்காகவே வெளிப்பட்டுள்ளன. இதையும் இறைவன் மனிதனுக்கு வழங்கியுள்ளான். இன்றைய காலத்தில் விஞ்ஞானம் வளர்ந்து வருகிறது. இந்த முன்னேற்றத்தை எல்லாம் இறைவன் முன்னதாகவே திருக்குர்ஆனில் கூறி விட்டான். அதாவது மனிதன் எல்லா துறைகளிலும், முன்னேற்றங்களின் பல கண்டுபிடிப்புகள் நிகழும். ஆனால் இறைவனின் உதவி இல்லாமல் இது நிகழ முடியாது. விஞ்ஞானிகள் கூட ஒரு விஷயத்தை ஆராயும்போது இல்ஹாமுக்குரிய நிலை அவர்களுக்கும் உருவாகிறது என்று கூறுகின்றார்கள். அவர்கள் இறைவனிடம் வேண்டினாலும் வேண்டாவிட்டாலும் ஒரு விஷயத்தை பெற வேண்டும் என்ற ஆர்வம் எழும் போது ஆராயும்போது அவர்கள் தன்னையும் அறியாமல் இறைவிடம் உதவி கேட்கிறார்கள். பிறகு அல்லாஹ் அவர்களுக்காக வழியை திறக்கிறான்.

நாம் இறைவனுக்கு சரியான முறையில் வணக்கம் செலுத்துபவர்களாகவும், அவனது படைப்புகளைப் பார்த்து இறை இருப்பின் மீது நமது ஈமானை மேன்மேலும் உறுதியாக்கிக் கொள்பவர்களாகவும் இருக்க அல்லாஹ் உதவி செய்வானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 10.04.2009

Translated by : **Maulavi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**